<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO.27/2015 E.P.NO. R.C.O.P. I.A.

Deposition of Witness PW -1

| | |
|---|---|
| Name | : பாலசுந்தரம் |
| Father's Name /W/o | : ராஜி ரெட்டியார் |
| Religion | : இந்து |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : விவசாயம் |
| Address | : மாங்காட்டுச்சேரி (கிராமம்) |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 20.02.2018

WEB COPY

குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

வா.சா.ஆ.1 ஆகிய தயானந்த முதலியாரால் எனக்கு எழுதிகொடுக்கபட்ட கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் மீதி பணத்தை கொடுக்க வேண்டும் என்ற ஷரத்து, முக்கியமான ஷரத்தாக அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை ஒப்புக்கொண்டு தான் வா.சா.ஆ.1 ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஷரத்திற்கு ஒப்புக்கொண்டு, அதற்கு உட்பட்டு தான் நான் கிரையம் பெற சம்மதித்து ஒப்பந்தம் போட்டுகொள்ளப்பட்டது என்றால் சரி. கிரைய ஒப்பந்தம் போடும் போது தயானந்த முதலியார் என்னிடம் அசல் பத்திரம் எதையும் காட்ட வில்லை. மீதி பணம் பெற்று கொண்டு சொத்தை ஒப்படைக்கும் போது தான் பத்திரங்களை காட்டினார். கிரைய ஒப்பந்தத்தில் சொல்லபட்ட காலகெடுவான 15.10.1978ல் மீதி கிரைய தொகையான ரூ8500

யை கொடுக்க நான் அன்றைய தினம் பணத்தை வைத்து இருந்தேனா என்றால் நான் பணம் கொடுக்க தயாராக இருந்தேன். ஆனால் அவர் வரவில்லை. கெடு காலம் முடிந்த மறு நாள் பணத்தை நான் தயாராராக வைத்து இருப்பதாகவும் வந்து கிரைய பத்திரத்தை எழுதி கொடுக்குமாறு வழக்கறிஞர் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஏதாவது முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்த கெடு முடிந்த பின்பு தயானந்த முதலியார் இறந்த விவரம் தான் தெரியும் ,தேதி மாதம் வருடம் தெரியாது. ஒப்பந்த காலத்திற்கு பிறகு தயானந்த முதலியார் எவ்வளவு காலம் இருந்தார் என்று தெரியாது. 01.03.2000 ஆண்டு தான் தயானந்த முதலியார் இறந்ததாக பிரதிவாதிகள் பதில் உரையில் சொல்லியுள்ளார்களா என்ற விவரம் வழக்கறிஞருக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன பதில் உரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை நான் என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. 01.03.2000ல் தயானந்த முதலியார் இறந்ததாக பிரதிவாதிகள் சொல்லியுள்ள விவரத்தை நான் தாவாவில் மறுத்து வேறு எந்த தேதியும் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. 27.12.1978ல் தயானந்த முதலியாரிடம் எங்கள் ஊரில் வைத்து ரூ5000 கொடுத்தேன். 27.12.1978ல் நான் மொத்த மீதி கிரைய தொகையான ரூ8500யை கொடுத்து விக்கரைய பத்திரத்தை பதிவு செய்துக்கொள்ள முயற்சித்தேனா என்றால் இல்லை. ரூ5000 கொடுத்து அன்றைய தினம் செல் எழுதி கொண்டேன். அன்றைய தினம் மீதி கிரைய தொகை முழுவதும் இல்லாத காரணத்தினால் அன்றைய தேதியிலேயே அதை செலுத்து விட்டு கிரைய பத்திரம் பெற வில்லையா என்றால் ஆம். 15.07.1979 அன்று மீதி கிரைய தொகையான ரூ.500யை செலுத்தினேன். அது குறித்தும் கிரைய ஒப்பந்தத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டது. அன்றைய தினமும் நான் கிரைய பத்திரத்தை பதிவு செய்ய முயற்சிக்கவில்லை என்றால் சரி. அன்றைய தினம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் எழுதிக்கொள்ள பணம் இல்லாத காரணத்தினால் தான்

WEB COPY

நான் பத்திர பதிவு செய்துகொள்ளவில்லை என்றால் சரி. நான் இரண்டு நாள் கால அவகாசம் பத்திர பதிவு செய்து கொள்ள கேட்டேன். நான் இரண்டு நாள் அவகாசம் கேட்டதால், நான் மைசூர் சென்று விட்டு வந்து பத்திர பதிவு செய்து கொடுப்பதாக தெரிவித்தார். அதன் பிறகு பத்திர பதிவை செய்து தர வருமாறு தயானந்த முதலியாரை சென்று அழைத்தேனா என்றால் இல்லை. அவரே சீக்கரம் வந்து கிரைய பத்திரத்தை எழுதி கொடுப்பதாக எனக்கு தபால் எழுதியிருந்தார். அந்த தபால் என்னிடம் உள்ளதா என்றால் நான் அனைத்து ஆவணங்களையும் வழக்கறிஞரிடம் கொடுத்துஉள்ளேன் அந்த ஆவணம் அதில் இருக்கும். அந்த தபால் அவர் மைசூர் சென்றதில் இருந்து எவ்வளவு நாட்களுக்குள் அனுப்பட்டிருக்கும் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. அந்த தபாலை பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும். குறிப்பிட்ட தேதிக்குள் வந்து பத்திரம் எழுதிகொடுப்பதாக தபாலில் சொல்லியிருந்தாரா என்றால் சொல்லியிருந்தார். தபாலில் சொல்லியிருந்த தேதி அன்று அவர் வரவில்லை. அந்த தபாலில் சீக்கிரம் வந்து கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதாக தான் சொல்லியிருந்தார். தேதி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. அந்த தபால் காலத்திற்கு பின்பு அவர் வராததால் அவருக்கு ஏதாவது நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் இல்லை. மேற்படி தபால் வந்த தேதியில் இருந்து தயானந்த முதலியார் உயிருடன் இருந்த காலகட்டத்தில், தபால் தேதியிலிருந்து 3 வருட காலத்திற்குள் வழக்கு போட்டேனா என்றால் இல்லை. அந்த தபாலையும் தாவா போடும் போதே வழக்கறிஞரிடம் கொடுத்து இருந்தேன். அது தாவாவில் தாக்கல் செய்யபட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது.

(இந்நிலையில் வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

WEB COPY